செ.வெ.எண்: 424/2019 நாள்: 06.09.2019

# பத்திரிக்கை செய்தி

ஓய்வூதியர் மற்றும் குடும்ப ஓய்வூதியர் குறை தீர்க்கும் நாள் கூட்டம் திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் தலைமையில் இன்று 06.09.2019 வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் கூட்ட அரங்கில் நடைபெற்றது. மேற்படி கூட்டத்தில் ஓய்வூதிய இயக்கக இணை இயக்குநர் திரு.கே.மதிவாணன், ஓய்வூதிய இயக்கக துணை இயக்குநர் திரு.பா.வேலாயுதம், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(கணக்குகள்) திரு.சே.வெங்கட்ராமன் மற்றும் மாவட்ட கருவூல அலுவலர் திருமதி.என்.சித்ரா ஆகியோர் கலந்து கொண்டனர். மேலும் ஓய்வூதிய குறைதீர்வு நாள் கூட்டத்திற்கான மனுக்கள் அளித்த மனுதாரர்கள் கலந்து கொண்டனர்.

மேற்படி ஓய்வூதிய குறைதீர்வு நாள் கூட்டத்திற்காக பெறப்பட்ட 28 மனுக்கள் சம்மந்தப்பட்ட துறைகளுக்கு அனுப்பப்பட்டு, எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து சம்மந்தப்பட்ட அலுவலரால் நேரடியாக உரிய ஓய்வூதியதாரர்களுக்கு தகவல் பெற்று வழங்கப்பட்டது. ஓய்வூதியம் தொடர்பான சில மனுக்களுக்கு மாவட்ட ஆட்சியர் மற்றும் ஓய்வூதிய இயக்குநர் அவர்களால் உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டது.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், மாவட்ட ஆட்சியரகம், திருவண்ணாமலை.**